# முன்னுரை

## மதர்ஸ் ஸர்வீஸ் சொஸைட்டி

தமிழ்நாட்டைத் தேடி வங்காளத்தில் பிறந்த ஸ்ரீ அரவிந்தரும் பிரான்சில் பிறந்த அன்னையும் வந்திருந்த போதிலும் அவர்களைத் தமிழ் மக்கள் தெரிந்து கொள்ளவில்லை. தெய்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஸ்ரீ அரவிந்தருடைய பூரண யோகத்தையும் அன்னையின் தெய்வீக சக்தியையும் தமிழ் மக்கள் அறிய வேண்டும் என்பது சொஸைட்டிக்குரிய இலட்சியங்களில் ஒன்று. இந்த நோக்கத்தை மனத்தில் கொண்டு ஸ்ரீ கர்மயோகி அவர்கள் 40க்கும் மேற்ப்பட்ட புத்தகங்களை தமிழிலும் 8 புத்தகங்களை ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டுள்ளார்கள். அவற்றின் விவரங்களும் கிடைக்கும் இடங்களும் பின் வருமாறு:-

## அன்னையின் தரிசனம்

வாழ்க்கையில் பல விதப் பிரச்சனைகள் இருக்கின்றன. உ-.ம். வேலை கிடைக்கவில்லை, திருமணம் ஆகவில்லை, வீடு கிடைக்கவில்லை போன்ற வாழ்க்கைப் பிரச்சனைகளை அன்பர்கள் எப்படி அன்னையிடம் பிரார்த்தனை செய்து தீர்த்துக்கொண்டார்கள் என்ற விவரங்கள் இந்த புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளன. இவை அனைத்துமே அன்பர்களுடைய உண்மையான அனுபவங்கள். ஒன்றுகூட கற்பனையில்லை. இது தவிர வாழ்க்கைக்கு முக்கியமான சில முறைகள் உ- ம். சுத்தம், ஒழுங்கு முறையான செலவு, விட்டுப் போன கடன் பாக்கி போன்ற உபயோகமான தகவல்கள் இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

## எல்லாம் தரும் அன்னை

தமிழர்கள் மரபில் வாழ்க்கை பிரச்சனைகள், அவைகளை அன்னையின் அருள் தீர்க்கும் விரைவு போன்ற விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அன்னையின்

அருளில் நம்பிக்கை வைத்தால் பிரச்சினை என்ற வார்த்தைக்கு நம் அகராதியில் இடம் இருக்காது.

## ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம்

ஸ்ரீ அன்னையில் நான்கு அம்சங்களான மஹேஸ்வரி, மஹாகாளி, மஹாலக்ஷ்மி மஹாசரஸ்வதி பற்றிய தெளிவான விளக்கங்கள் அன்னையின் அவதார சிறப்பு அன்னையின் அருளின் மகிமைகள் லைஃப் டிவைன் சாவித்திரி (அன்னையின் யோக ரகசியம்) போன்ற நூல்களைப்பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. படிக்க படிக்க நாம் இந்த பூலோகத்திலேயே இல்லை என்ற உணர்வை கொடுத்து நம்மை சொர்க்கத்துக்கே அழைத்துச் செல்லும் மிகவும் சக்தி வாய்ந்த எழுத்துக்கள்.

## அதிர்ஷ்டம்

அதிர்ஷ்டம், சாதாரணமாக பூர்வ ஜென்மங்களில் செய்த நல்லவற்றிற்க்கு பரிசாக கிடைப்பது. அது எந்த ஜென்மத்தில் பலிக்கும் என்று திட்டவட்டமாக சொல்ல முடியாது. ஆனால் அன்னையை அறிவதே அதிர்ஷ்டம். அவர் நம்மை நாடி வரும் தெய்வம், தேடி வரும் தெய்வம். நாம் முன்பு செய்த நல்வினைகளும், அன்னையை அறிந்த இந்த ஜென்மத்தில் அதிர்ஷ்டமாக பலித்துவிடும். மேலும் கல்வி, வீடு இவற்றில் உள்ள பிரச்சனைகள் அவற்றை எப்படி தீர்க்கலாம் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

## ஆயிரத்தில் ஒருவர்

அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் உபயோகமான சில கருத்துக்களை இந்த புத்தகத்தில் சொல்லி இருக்கிறார். அவையாவன - வசூலாகாத கடன் நிறைய பேருக்கு இருக்கும் பிரச்சனை இது, கடன் வரவே வராது என்று முடிவும் செய்து இருப்போம், நமது முடிவை மாற்றி நம் கடனை இந்த கட்டுரையில் உள்ள

விவரங்கள் வசூல் செய்து கொடுத்துவிடும் என்ற கருத்தை மனம் நம்பிக்கையுடன் ஏற்று செயல்பட வேண்டும். அது மட்டுமே நிபந்தனை,

## உறுத்தல்

பலரின் வாழ்க்கையில் சிறிய வயதில் நடந்த கசப்பான சம்பவங்கள் உறுத்தலாக மனதில் நின்றுவிடும். அது மனத்தை அழுத்தும் வரை வாழ்க்கையில் எந்த பெரிய நல்லதும் வரப்போவது இல்லை. அதை களைந்த மறு நிமிடம் வாழ்க்கை பாதையே மாறிவிடும். இதை செய்வது எப்படி? கட்டுரையில் உள்ள விவரங்கள் இதற்கு பேருதவியாக இருக்கும்.

## தீராத பிரச்சனை

தீராத பிரச்சனை தீர்க்க முடியாத பிரச்சனை என்பது இல்லை. இந்த கட்டுரையில் கூறியிருக்கும் கருத்தினை மனம் ஆழ்ந்து நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டு அதை நடை முறைபடுத்த உறுதிப் பூண்டால் தீராத பிரச்சனை என்ற ஒன்று இல்லவே இல்லை என்று காணலாம்.

## கோபம்

கோபம் என்பது ஒரு குணம். அன்னை முறைகளைப் பயன் படுத்தினால் எப்படி கோபத்தில் இருந்து வெளிவர முடியும். இந்த குணத்தை வெல்ல முடியும் என்பன போன்ற கருத்துக்கள் சொல்லப் பட்டுள்ளன.

## அன்னையின் வரலாறும் வழிப்பாடுகளும்

இந்தப் புத்தகம் ஸ்ரீ அன்னை யார்? ஸ்ரீ அரவிந்தர் யார்? இவர்கள் எதற்காக பாண்டிச்சேரி வந்தார்கள்? ஆசிரமத்தை அங்கு நிறுவியதன் நோக்கம் என்ன? அதனால் நமக்கு என்ன பயன்? என்று கூறப்பட்டுள்ளது. மேலும் அன்னையை வழிபடும் முறைகளையும் புத்தகம் விவரிக்கிறது.

## அன்னையின் அருள்

வாழ்வில் அன்னையின் அருள் செயல் பட்டு பிரச்சனை தீரும் விதங்களை புத்தகம் விவரிக்கிறது. அன்னையின் அருள் எவ்வளவு சக்தி வாய்ந்தது என்று அறிய 'கான்சர்' என்ற கட்டுரையைப் படித்தால் புரிந்துகொள்ள முடியும். ஒரு தகப்பனார்க்கு 'கான்சர்' மகள் அன்னைக்குப் பிரார்த்தனை செய்ததாலேயே அதன் சுவடுகூட இல்லாமல் குணமாகியிருக்கிறது. இது எங்கள் தியான மையங்களில் வந்து நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்த அன்பர்கள் அனுபவமும் கூட. சமீபத்தில் தியான மையம் வந்த ஒரு பெண் தன் தாயாருக்கு கான்ஸர் என்றும் 15 நாள் தான் உயிரோடு இருப்பார் என்று டாக்டர் ரிப்போர்ட் சொல்வதாக சொன்னார். அவருடைய பிராத்தனை அன்னையே என் தாயாரை கான்ஸரே இல்லாமல் ஆக்கி விடுங்கள் என்று நான் உங்களிடம் கேட்கவில்லை ஆனால் இந்த கட்டுரையில் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் கூறியிருப்பது சத்தியமான வாக்கு என்று என் மனத்திற்கு படுகிறது. உங்கள் திருவுள்ளம் எப்படியோ அதன் படி நடக்கட்டும் என்று சொல்லிவிட்டு போயிருக்கிறார். அன்று டாக்டர் மீண்டும் ஒரு தடவை ஸ்கேன் செய்து பார்க்கலாம் என்று சொன்னதின்பேரில் பார்த்ததில் கேன்ஸ்ர் மாயமாய் மறைந்துவிட்டு இருந்தது. இது அன்னையின் அருளுக்கே உரிய கருணை என்றுதான் சொல்ல வேண்டும். இதை சொல்ல தியான மையம் வந்த பெண்ணுக்கு நன்றியால் நெஞ்சம் நிறைந்து பேச நா எழவில்லை.

## புத்திர சந்தானம்

இந்த கட்டுரையில் பிள்ளை பேறு இல்லாதவர்களுக்கு அன்னையிடம் பிராத்தனை செய்து எப்படி அந்த பிரச்சனை தீர்ந்தது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. மேலும், 'ட்ரான்ஸ்பஃர்', நல்ல வேலை, 'ப்ரமோஷன்' வேண்டுபவர்கள் எப்படி அன்னையிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.